**O.S**.248/2012 மேகநாதன் **DW**1

**நாள் :** 16.09.2019.

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறார்.**

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்து இருக்கும் இடம் எனக்குத் தெரியும். 5 ம் பிரதிவாதி சாந்தி எனது அண்ணி. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள். 1 முதல் 4 பிரதிவாதிகள்தான் தாவா சொத்திற்கு வாரிசுகள் என்றால் சரிதான். 04.07.1985 ம் தேதிய பாகப்பிரிவி பத்திரத்தின்படி டி செட்யூல் சொத்துக்கள்படி பாத்தியப்பட்டது. 1987 ம் வருடம் தாவா சொத்துக்களை வாய்மொழியாக 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பாகப்பிரிவினை செய்து கொடுத்துவிட்டோம். அவரவர்க்கு உரிய பாகத்தை அமைதியான முறையில் சுவாதீனமும் செய்து வருகிறோம். 1 ம் பிரதிவாதி 28.03.2003 ம் தேதி 2 ம் பிரதிவாதிக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதே தேதியில் நான் 2 ம் பிரதிவாதிக்கு ஒரு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி லோகநாதனிடம் இருந்து 7 ம் பிரதிவாதி 29.12.2008 ம் தேதியன்று 2 ம் பிரதிவாதியின் சொத்தை கிரையம் செய்து கொள்ள ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 27.02.2012 ம் தேதி 7 ம் பிரதிவாதிக்கு 2 ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி சாந்திதான் கிரையம் வாங்கியுள்ளார். 7 ம் பிரதிவாதி குப்புசாமிதான் அவ்வாறு கிரையம் பெற்று தாவா சொத்தை அனுபவமும் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 7 ம் பிரதிவாதியின் உரிமையை பறிக்க வேண்டும் என்று 1 முதல் 3 பிரதிவாதிகளும், நானும், வாதியும் சேர்ந்து 20.07.2009 ம் தேதி போலியாக ஒரு ஆவணம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றும், அந்தப் பத்திரம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 06.04.2012 ம் தேதி 7 ம் பிரதிவாதி வாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு பெருந்துறை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது தெரியும். அந்த வழக்குதான் இதே நீதிமன்றத்தில் **OS** 237/2013 என்று நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 2009 ம் தேதி வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த பத்திரம் செல்லாது என்று சொல்லி அதே பெருந்துறை நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியாது. அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் **OS** 238/2013 என்ற எண்ணில் நடந்து வருகிறது என்றால் சரிதான்.